# பட்லூர் வாகீசர் திருக்கோயில் வரலாறும் கலை அழகும்

# The History and art of the Badlur Wagisar Temple beauty

**உ.வினோதினி,** முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர், ஈரோடு-638101

**U. Vinodini,** Ph.D Scholar, Department of Tamil, Navarasam College of Arts and Science for Women, Arachaloo, Erode-638101

**DOI: 10.5281/zenodo.60749936**

**Abstract:**

The temples are the gateway to the antiquity of a town. It is not only the devotion of the people but also the abode of the arts and the historical archives. The worship in the temple is meant to highlight the beliefs of the people. These culture continue to grow along the ways. Changes in the way of worship set the stage for the change in society. In the history of the site are buried myths, historical documents and the stories of the people's endeavors. Inscriptions found in temples are the document that clarifies the ambiguity of the inscriptions found in the context of the ambiguity in the historical period or events caused by the distortion of the histories in the books. Therefore, it is the chief duty of the people to preserve the temple as a rare place to preserve it from extinction in time and pass it on to the next generation.

**Key words:** Temples, Devotion, Archeology, Transformations, Myths, Her initiative Stories.

**ஆய்வுச் சுருக்கம்**

ஓர் ஊரின் பழமையை எடுத்துரைக்கும் வாயிலாகக் கோயில்கள் திகழ்கிறது. இது மக்களின் பக்தித் திறத்தை மட்டும் விளக்காமல் கலைகளின் இருப்பிடமாகவும் வரலாற்று ஆவணக் காப்பகமாகவும் திகழ்கிறது. கோயிலில் உள்ள வழிபாட்டு முறைகள் மக்களின் நம்பிக்கைகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த வழிபாட்டு முறைகள் வழிவழியாய்த் தொடர்ந்து வருதாயும் இருக்கிறது. வழிபாட்டு முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் அப்பொழுதிய சமுதாய மாற்றத்தை புலப்படுத்துவதாய் அமைகிறது. தல வரலாற்றில் புராணக்கதைகள், வரலாற்று ஆவணக் கூறுகள் மற்றும் மக்களின் தன் முனைப்புக் கதைகளும் புதைந்து கிடக்கின்றன. புத்தகங்களில் உள்ள வரலாறுகளில் திரிபு ஏற்பட்டடு வரலாற்றுக் காலம் அல்லது நிகழ்வுகளில் ஐயப்பாடு நிலவும் சூழலில் கோயில்களில் கிடைக்கும் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஐய்யத்தைத் தெளிவுபடுத்தும் ஆவணமாகத் திகழ்கிறது. ஆதலால் காலவெள்ளத்தில் அழியாமல் பாதுகாக்கவேண்டிய அரிய இடமாக கோயிலைப் பாதுகாக்கத்து அதை அடுத்த தலைமுறையினருக்கு கொடுக்க வேண்டியது மக்களின் தலையாய கடமையாக அமைகிறது.

அச்சத்தின் காரணமாக இயற்கையை வழிபட ஆரம்பித்த மனிதன் படிப்படியாக பல கடவுள்களை உருவாக்கி வழிபட ஆரம்பித்தான். முதலில் குறியீட்டு வடிவில் வணங்கப்பட்ட

கடவுள்களுக்கு அதன் பின் உருவங்களைக் கொடுக்க ஆரம்பித்தான். உருவத்தைக் கொடுத்த பின்பு அதை ஓர் இடத்தில் நிலையாக வைத்து அனைவரும் கூடி வழிபடக்கூடிய வகையில் அதற்கு கோயிலையும் அமைத்தான். அப்படி அமைக்கப்பட்டக் கோயில்களில் தன் கலை நயத்தையும் புகுத்தினான். இப்படிக் கட்டப்பட்ட கோயில்கள் தன்னகத்தே, பல வரலாறுகளை உள்ளடக்கியதாய், மக்களுக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்து துன்பத்தைப் போக்குவதாய், மக்களின் நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாய், மனதில் என்றும் குடிகொண்டிப்பதாய் திகழ்கிறது.

**வாகீசர் கோயில் அமைவிடம்**

ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் பட்லூரில் ஏரிக்கரை ஓரத்தில் அமைந்துள்ளது இத்திருத்தலம். ஈரோட்டில் இருந்து 36 கிலோமீட்டர் தொலைவிலும் பவானியில் இருந்து 21 கிலோமீட்டர் தொலைவிலும் அந்தியூரில் இருந்து 7 கிலோமீட்டர் தொலைவிலும் அம்மாபேட்டையில் இருந்து 13 கிலோமீட்டர் தொலைவிலும் சென்னம்பட்டியில் இருந்து 13 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. ஈரோடு மற்றும் பவானியில் இருந்து சென்னம்பட்டி செல்லும் பேருந்துகளும் அந்தியூரில் இருந்து குருவரெட்டியூர் செல்லும் பேருந்துகளும் கோயில் வழியே செல்லும். அம்மாபோட்டையில் இருந்து வந்தால் நால்ரோட்டில் இறங்கி 1 கி.மீ நடந்து செல்ல வேண்டும். சென்னம்பட்டியில் இருந்து பவானி ஈரோடு செல்லும் பேருந்துகள் கோயில் வழியே செல்லும்.

**தலவரலாறு**

சிவ பெருமான் ஆடல் வேந்தன் என்பதால், அந்தியூர் கோட்டைக்கு நடனம் ஆடச் செல்லும் நடனமகளிர் தான், முதலில் வாகீசரை வில்வ மரத்தடியில் வைத்து வணங்கி வந்துள்ளனர். பட்லூரில் பாதுகாப்புக் கோட்டை கட்டப்பட்ட பின்பே கோயில் கட்டி வழிபட்டுள்ளனர். இறைவன் ஒன்பது இதழ்கள் கொண்ட தாமரை பீடத்தில் உள்ளார். இங்கு நவகிரங்கள் கிடையாது. ஒன்பது இதழ் கொண்ட தாமரை பீடமே நவகிரகமாக விளங்குகிறது என்பது இதன் வரலாற்று மரபாக உள்ளது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நவகிரகம் அமைக்க முற்படும் வேலையில், பிரதிஷ்டைக்கு இரு நாட்களுக்கு முன்பு, மழைவெள்ளம் காரணமாக கிணற்றுள் இருந்த நவகிரக சிலைகளில் ஒன்று காணமல் போய்விட்டது, எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. அதன் பிறகு பத்து வருடம் கழித்து அதே கிணற்றில் கிடைத்துள்ளது. இதன் பிறகு நவகிரகம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது. இக்கோயில் எண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது ஆகும்.

**தலவிருச்சம்**

இங்கு வில்வமரம் தல விருச்சமாக உள்ளது. மர வழிபாடு என்பது சங்க காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் ஒரு இயற்கை வழிபாடாகும். இந்த மர வழிபாடே இன்று தலவிருட்சமாக வணங்கப்படுகிறுது.

**“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப”** **( குறுந்தொகை - 87)**

என்று குறுந்தொகை மன்றத்தில் உள்ள கடம்ப மரத்தில் தெய்வம் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

**"ஆல முற்றங் கவின்பெறத் தைஇய**
**பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர்"** (அகம் - 181)

என்று அகநானூறு மகளிர் ஆல மரத்தடியில் சுத்தம் செய்து அதனை வழிபட்டனர் என்பதைத் தெரிவிக்கிறது.

**"ஆல் அமர் செல்வற்கு"** (சிறு - 97)

என்று சிறுபாணாற்றுப்படை ஆல மரத்தில் இறைவன் உறைந்திருந்ததைக் குறிப்பிடுகிறது.

**"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் கழனி"** (நற்றிணை - 216)

என்று வயலின் கரை ஓரத்தில் உள்ள வேங்கை மரத்தில் கடவுள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு சங்க காலத்தில் இருந்து மக்கள் மரத்தை தெய்வமாகவும் மரத்தில் தெய்வம் உறைவதாகவும் எண்ணி வழிபட்டதை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகிறது.

**கல்வெட்டுச் செய்தி**

இந்தக் கோயிலில் மகாமண்டபத்தின் முன் பகுதி தொடங்கி, அர்த்தமண்டபம் கருவறை என சுற்றிலும் முழுவதுமே ஜகதிபட்டை மற்றும் குமுதப்பட்டைகளில் கல்வெட்டெழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் வரிவடிவம் தமிழ் எழுத்துவடிவம் ஆகும். இந்தக் கல்வெட்டுச் செய்திகள் பற்றி ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -1 -இல் கூறப்பட்டுள்ளது.

கொங்கு சோழர்களில் வீரராசேந்திரச் சோழன் அதிகக் காலம் ஆட்சி செய்தவர்(1206-1252). இவர் ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்துள்ளார். "கொங்குநாடு முழுவதும் இவனுடைய கல்வெட்டுக்கள் முந்நூற்றுக்கும் அதிகமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன" (ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையேடு பக்கம்-25). இங்கு கிடைத்த இக்கோயில் பற்றிய எட்டு கல்வெட்டுகளில் ஆறு கல்வெட்டுகள் அவன் காலத்தியனவாக உள்ளன.

**கல்வெட்டுகள் கூறும் செய்திகள்**

1. காலம்: கி.பி 1215- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "ஈரோட்டில் உள்ள இராசராசப் பெருந்தெரு வாணியர் முப்பேறுடையான் பொன்னம்பலவான் வாகீசுவரர் கோயிலில் மண்டபம் கட்டுவதற்காக ஒரு அச்சுக் கொடுத்தார்" (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்188) என்று குறிப்பிட்டுள்ளது. இந்த மகா மண்டபத்திலே தான் தாயார் சன்னதி உள்ளது. தாயாருக்கு தனி சன்னதி எடுக்கப்பட்டது சோழர் காலத்தில்தான்.

2. காலம்: கி.பி 1229- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "வடகரை நாட்டுப் புன்னத்திலிருக்கும் பாண்டி வேட்டுவரில் புன்னத்துராளி மகள் பாண்டாண்டி என்பவர் வாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்" (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்189) என்ற செய்தியுள்ளது. இது மக்கள் தீபம் வைப்பதில் உள்ள ஆர்வத்தைக் காட்டுவதாய் உள்ளது.

3. காலம்: கி.பி 1237- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "வடகரை நாட்டு பட்டில் ஊராளிகளும், நடுவில் நித்யகண்டச் சக்ரவர்த்தியும் வாகீசுரர் கோயிலில் பணிபுரியும் பூசிக்கும் நம்பியார் பட்டில் காணியளருக்கும், பாரசிவர் பூமன் வன்னியான வீரபத்ரச் சக்கரவர்த்திக்கும் மாணபோகமாக நிலம் கொடையாகக் கொடுத்தனர்". (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்190) என்ற செய்தியுள்ளது. அன்றைய காலத்தில் இறை பணி செய்வோரை போன்றிய பாண்மையைக் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகிறது. ஒரு அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட இந்த வட்டாரத்தில் இறை பணி செய்யும் பண்டாரத்திற்கு நில தானம் வழங்கப்பட்ட செய்திகளை ஆவணங்களின் வழியும் கள ஆய்வுத்தரவுகளின் வழியும் அறியமுடிகிறது.

4. காலம்: கி.பி 1240- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "வடகரை நாட்டுப் பட்டிலிருக்கும் கொடும்பூர் வேட்டுவரில் பிள்ளை என்பவர் வாகீசரர் கோயிலில் மூன்று சந்தியாதீப விளக்கு வைக்கக் கொடை அளித்தார். விளக்கு வைக்கத் தவறினால் கண்ணும் மண்ணும் இழக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்191) என்ற செய்தியுள்ளது.

5. காலம்: கி.பி 1244- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "வடகரை நாட்டுப் பட்டில் ஊரும், ஊராளிகளும் வாகீசுவரரக்குப் பசுங்கண்ணித் தாழை என்று பெயர் உள்ள ஏரியையும், ஏரி நீர் பாயும் நிலத்தைக் கொடையாகக் கொடுத்தனர். அந்நிலத்தைக் கோயில் காணியுடைய பிராமணர் பாலாசிரிய கோத்திரம் பொல்லாத பிள்ளை மகன் மாதேவ பட்டனும், காணியுடைய உவச்சர் பராசிவர் பூமன் வன்னியான வீரபத்ரச் சக்கரவர்த்தியும் உழுது மூன்றில் ஒன்று வாகீசுவரர்க்கு மேல்வாரமாகக் கொடுக்க வேண்டும்" (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்192) என்ற செய்தியுள்ளது. இது நில தானத்தையும் நீர் நிலையை உருவாக்கி அந்நிலங்களுக்கு நீர்பாச வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது பற்றி விளக்குவதாய் உள்ளது. இது இம்மக்களின் நீர்மேலாண்மை உத்தியை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது. இன்று இந்த ஏரி மட்டும் உள்ளது. இதில் இருந்து எந்த நிலங்களுக்கும் நீர் பாய்வதில்லை.

6. காலம்: கி.பி 1244- வீரராசேந்திரன்- கொங்குச்சோழர்

செய்தி: "வடகரை நாட்டு பட்டில் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவரில் பெரியதேவன் மகன் பெரிய பிள்ளையான பெரியதேவன் மூன்று சந்தியாதீபம் எரிப்பதற்காக மூலப் பொருளாக ஒரு அச்சுக் கொடுத்தார்" (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி- 1 பக்கம்193) என்ற செய்தியுள்ளது. இன்று நாம் கோயிலுக்கு எண்ணை வழங்குவதைப் போல அன்று கோயில்களில் தினமும் தீபம் ஏற்றி வைக்க தனியாக ஆள் நியேமிக்கப்பட்டு இருந்த செய்தியை இதன் வழி அறியமுடிகிறது.

7. காலம்: கி.பி 13ஆம் நூற்றாண்டு கொங்குச்சோழர்

செய்தி: வடகொங்கு நாட்டில் வடகரை நாடு உட்பட பல நாடுகளில் உள்ள சிவபிராமணர்களுக்கும் தானத்தாருக்கும் அளிக்கப்பட்ட உரிமைகள் குறிக்கப்பட்டுள்ளன.

8. காலம்: கி.பி1334- மூன்றாம் வீரவல்லான்.

செய்தி: "பட்டில் வேட்டுவரில் பிள்ளை என்பவன் கொடுத்த கொடை குறிக்கப் பெறுகிறது" ( சீதாராம் குருமூர்த்தி மற்றும் செ.ராசு (பதிப்பாசிரியர்கள்) -ஈரோடு மாவட்டக் கல்வெட்டுதகள் தொகுதி- 1 -2007-

பக்கம்197 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 600008) என்ற செய்தியுள்ளது.

**வாகீசர் திருக்கோயில் அமைப்புமுறை**

வாகீசர் திருக்கோயில் கருவறை மற்றும் நுழைவாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று மற்றும் சுற்றுவர் என்ற அமைப்பைக் கொண்டுள்ளது. கோபுரம் இங்கு இல்லை. மகாமண்பத்தில் வடகிழக்கில் தெற்கு நோக்கிய வண்ணம் சௌந்திரவள்ளித் தாயார் காட்சி தருகிறார். திருச்சுற்றில் பரிவார தெய்வங்களாக தென்மேற்கில் விநாயகர் சன்னதியும், வடமேற்கில் ஆறுமுகர் சன்னதியும், வடகிழக்கில் காலபைரவர் சன்னதியும் அமைந்துள்ளது. சுற்றுவருக்கு வெளியே கோயிலை ஒட்டி குதிரைபட்டான் கல் உள்ளது.

**விமானம்**

இக்கோயில் விமானம் அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கீரிவம், சிகரம், ஸ்தூபி என்ற ஆறு பெரும் பகுதிகளைக் கொண்டு ஒரு தளத்துடன் விளங்குகிறது. அதிட்டானம் பாதபந்த அதிட்டானவகையைச் சார்ந்ததாக அமைந்துள்ளது. இந்த அதிட்டானம் உபானவரி, ஜகதிவரி, குமுதவரி, கண்டம்வரி, பட்டிகைவரி என்ற துணை உறுப்புகளைக் கொண்டதாக விளங்குகிறது. அதிட்டான பகுதியில் பட்டிகைவரி வரை கருங்கல்லிலும் மற்றவை செங்கற்கள் மற்றும் சுதையால் ஆனவை. தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் கோடங்கள் உள்ளன. கோஷ்டத்தில் தெய்வசிற்பங்கள் இல்லை. சாலைப்பகுதியில் தெற்கு நோக்கி தட்சணா மூர்த்தியும், மேற்கு நோக்கி உமாமகேசுவர மூர்த்தியும், வடக்கு நோக்கி பிரம்மாவும் உள்ளனர். கிழக்கே உவரும் இருந்து சிதைவடைந்தது போல் இருக்கின்றது. தட்சணா மூர்த்தியின் உருவமும் தலை சிதைவடைந்து உள்ளது. ஸ்தூபி(கலசம்) தற்பொழுது இல்லை. இது எப்பொழுது எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. இந்த விமான அமைப்பு சதுரத்தளம் சதுரச் சிகரம் உடையதாய் உள்ளது.

**கருவறை**

கருவறை சதுரவடிவில் செங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குமேல் தடுப்பு இல்லை. இதன் அமைப்பு கீழிருந்து மேலே சிறுத்துக் கொண்டே செல்கிறது. இந்த அமைப்பிற்கு 'கதலிகாகர்ணம்' என்று பெயர். இவ்வமைப்பு முறை 'தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் விமானத்தின் உட்கூட்டை ஒத்ததாய் உள்ளது'. இங்கு சிவன் லிங்க வடிவத்தில் தாமரைபீடத்தில் உள்ளார். இந்த தாமரை பீடம் ஒன்பது இதழ்களைக் கொண்டாதாக உள்ளது. அதுவும் இதழ்கள் விரிந்த அமைப்பு உடையதாக உள்ளது. சிவலிங்கத்திற்கு நாகாபரணம் சாற்றப்பட்டுள்ளது.

**அர்த்த மண்டபம்**

அர்த்தமண்டபத்தின் மேற்கூரை கருங்கல் கட்டுமான அமைப்பைக் கொண்டுள்ளது. இது மிகச்சிறிய அளவில் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தின் வலப்புத்தில் மட்டும் போதிகை அமைப்பைக் கொண்ட அரைத்தூண் உள்ளது. இது செங்கற்கள் மற்றும் சுதையால் அமைக்கப்பட்டு உள்ளது.

**மகாமண்டபம்**

மகாமண்டபத்தின் மேற்கூரையும் கருங்கற்களால் அமைந்துள்ளது. இது செவ்வகத்தளமாக அமைந்துள்ளது. இந்தமண்டபத்தில் நான்கு கற்தூண்கள் அமைந்துள்ளன. இந்த தூண்கள் தரங்கவெட்டுப் போதிகை அமைப்பைக் கொண்டதாய் சதுரம், எண்கோணம், சதுரம் என்ற கலவை அமைப்பைக் கொண்ட தூணாக அமைந்துள்ளது. வெட்டுபோதிகை அமைப்பு சோழர் காலத்திய பாணி என்பதால் இது சோழர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது. இந்தத் தூண்களில் சதுரப்பகுதியில் சிறிய அளவில் சிற்பங்கள் இடம் பெறுகிறது. இது புராணக்கதைகளை விளக்கும் விதமாக இருக்கிறது. இந்தவகை அமைப்பு பிற்காலச் சோழர் காலத்தில் இருந்து வந்ததனை இராசுபவுன்துரை "சிற்பங்கள் தூணின் மூன்று சதுரப் பகுதிகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. நான்கு தூண்களும் கருப்பு நிறக் கல்லால் அமைந்துள்ளன. பிற தூண்களிலிருந்து மாறுபட்டும் இடம்பெறுகின்றன. தெய்வச்சிற்பங்களுடன் புராணக் கதைகளைக் கூறும் வடிவங்களாக அமைவதால் இவ்வகைத் தூண்கள் சிறப்புப் பெறுகின்றன" (தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபில் தூண்கள்-பக்-180) என்று சோழர் கால தூண்களின் கலை நயத்தை தாராசுத் தூண்களின் வழி எடுத்துக்காட்டுகிறார் இராசு பவுன்துறை. மேலும் இந்த மகா மண்டபம் சோழர் காலத்தில் கட்டப்பட்டதை கல்வெட்டும் கூறகிறது.

அர்த்தமண்டபத்தைத் தொடர்ந்து வரும் இந்தத் தூண்களில் நடுசதுர அமைப்பு பகுதியில் மட்டும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. தெற்குப்புறத்தூணில், தெற்குப்பக்கம் பசு சிவலிங்கத்தின் மீதுபால் பொழிவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப்பக்கம் ஊர்த்துவ கணபதியின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மற்ற இருதிசைகளிலும் ஒரு ஆரத்தினுள் ஆரம் அமைத்து அதில் எட்டு இதழ்கள் கொண்டமலர் செதுக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வடக்குத் தூணில் தெற்கு பார்த்த சதுரபக்கத்தில் வராகன் வராகி இணைந்து நடனம் ஆடும் காட்சிகள் செதுக்கப்பட்டு உள்ளன. கிழக்குச் சதுரபக்கத்தில் ஆலமரத்தின் அடியில் உள்ள சிவலிங்கத்திற்கு யானை தன் துதிக்கையால் வழிபாடு செய்வதுபோல் உள்ளது. மற்ற இருதிசைகளிலும் ஒரு ஆரத்தினுள் ஆரம் அமைத்து அதில் எட்டு இதழ்கள் கொண்டமலர் செதுக்கப்பட்டுள்ளது.

மற்ற இரண்டு தூண்களிலும் நான்கு புறமும் ஒரு ஆரத்தினுள் ஆரம் அமைத்து அதில் எட்டு இதழ்கள் கொண்டமலர் மட்டும் செதுக்கப்பட்டுள்ளது. மற்ற சிற்பங்கள் ஏதும் இல்லை. தூண்களில் காணப்படும் நடனச் சிற்பங்கள் இங்கு நடனக்கலை பேணப்பட்டு வந்ததை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

வடபுறத்தில் உள்ள இரண்டு தூண்களுக்கும் நடுவே சௌந்திரவள்ளித் தாயாரின் கருவறை உள்ளது. அம்மையானவள் தெற்கு நோக்கியுள்ளாள். இந்த அம்மையின் கருவறைக்கு விமானம் கிடையாது. மேற்கூரை மட்டுமே உள்ளது. இது கருங்கல்லால் அமைக்கப்பட்டு தளத்தின் மேல் சுதையால் பூசப்பட்டு உள்ளது.

**சௌந்திரவள்ளித் தாயாரின் உருவஅமைப்பு**

சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரவல்லன. இவை மனிதனின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. இந்தச் சிற்பங்கள் மெழுகு, அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம், முதலியவைகளினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகிறது என்பதை

**“கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன”**

**(தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் பக்கம்-39)**

என்று திவாகர நிகண்டு கூறுவதை மயிலை சீனி வேங்கடசாமி எடுத்துக் காட்டுகிறார்.

அன்னையானவள் இங்கு நின்ற நிலையில் காட்சி தருகிறாள். நான்கு கரங்களுடன் காட்சிதருகிறாள். வலகரங்களில் ஒருகரத்தில் தாமரை மலரை பிடித்துக்கொண்டும் மற்றொரு கரத்தை வரதமுத்திரையைக் காட்டியவண்ணமும் இடதுகரங்களில் ஒருகரத்தில் தாமரை மலரைபிடித்துக் கொண்டும் மற்றொருகரத்தை அபயமுத்திரையைக் காட்டியவண்ணமும் உள்ளாள். தலையில் கீரிடம் அணிந்துள்ளாள். கைகளில்கடகவளையும், வளையலும் அணிந்துள்ளார்.

அம்மையை வணங்கி வெளியே வந்தால் நந்தி அமைந்துள்ளார். இரு கால்களையும் மடக்கி படுத்துக்கொண்டுள்ளார். இவர் கழுத்தில் வலபுறம் மணியும் அணிகலன்களும் அணிவிக்கப்பட்டுள்ளது.

மகாமண்பத்தின் வெளிப்புறத் தோற்றத்தின் அழகைக் கண்டு களிக்க முடியும். இதுவும் விமான அமைப்பு போன்று உபமான வரிமுதல் கர்ணகூடுவரை பல பகுதிகளைக் கொண்டு அழகாகக் காட்சியளிக்கிறது. மகாமண்பத்தின் சுற்றுச்சுவரின் நான்கு மூலையிலும், நந்தியின் சுதை உருவம் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தூண்கள் அதன் மேல் உள்ள யாழிவரி மற்றும் கர்ணக்கூடு ஆகியவை அழகாக உள்ளது. இது கருவறை விமானம் வரை தொடர்கிறது. மகாமண்டபம் அர்த்தமண்டபத்தோடு இணைந்தும் அர்த்தமண்டபம் கருவரையோடு இணைந்தும் உள்ளது.

**பரிவாரதெய்வங்கள்**

**கன்னிமூலை விநாயகர்**

இதன் கருவறையும் சதுரவடிவில் அமைந்து சதுரத்தளம் சதுரசிகரம் அமைப்புடையதாய் அமைந்துள்ளது. விநாயகரின் உருவம் ஒரு பலகைக்கல்லில் அழகாக செதுக்கப்பட்டுள்ளது. புடைப்புச் சிற்பமாக உள்ளது.

**ஆறுமுகர் கோயில்**

இதும் நாகராசதுரத்தளம் சதுரசிகரம் அமைப்புடையதாய் அமைந்துள்ளது. இதுவும் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இவர் சூர சம்காரமுருகராக உள்ளதால் இவர் முன்பு தெற்கு நோக்கி அமைந்துள்ளார். அதன் பின்பு சிலையின் அடியில் புதையல் எடுக்கும் முயற்சியால் சிலரின் தூண்டுதலால் கிழக்குநோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

**சண்டிகேஷ்வரர்**

கருவறைக்கு வெளியே வடக்குப்புறம் தெற்கு நோக்கியவாறு அமர்ந்த கோலத்தில் உள்ளார். ஒருகையில் மழு ஏந்தியவண்ணம் உள்ளார். மற்றொரு கையை மடிமீது வைத்த வண்ணம் இரு கரங்களுடன் காட்சியளிக்கிறார். இவர் கடிப்பு என்னும் காதணி அணிந்துள்ளார். சவடி மற்றும் சரம்பள்ளி அணிகலன்களை அணிந்துள்ளார். பூணூல் அணிந்துள்ளார்.

இவருக்குநேர் எதிரே சற்று கிழக்குத்தள்ளி கருவறையின் கோஷ்டத்தில் துர்க்கை இருத்தல் இயல்பு. ஆனால், இங்கு கோஷ்ட தெய்வங்ளின் உருவம் இல்லை எனபதால் அந்த இடத்தில் துர்க்கை இருப்பதாக எண்ணி அருவ வழிபாடு செய்யப்படுகிறது. இவ்வாறே பிற கோஷ்ட பகுதிகளிலும் வழிபாடு செய்யப்படுகிறது.

**கால பைரவர்**

இதுவும் சதுர வடித்தளமாக அமைந்துள்ளது. கால பைரவர் நின்ற நிலையில் அக்னி கீரிடத்துடன் நான்கு கரங்களுடன் நாய், வாகனத்துடன் காட்சியளிக்கிறார். இங்கு நாய் வாகனம் இவருக்கு வலபக்கம் இருப்பது ஒரு சிறப்பாகும். இவர் சவடி, சரம்பள்ளி ஆகியவற்றோடு வீரச்சங்கிலியும் அணிந்துள்ளார். இடையணியாக குறங்குச் செறி அணிந்துள்ளார். காலில் வீரக்கழலும், கை பகுதியில் தோல் வளையும் அணிந்துள்ளார். காதில் குதம்பை அணிந்துள்ளார். நான்கு கரங்களில் வல கரங்களில் சூலம் ஏந்தி சூசி முத்திரை காட்டியும், இடக்கரங்களில் நாகம் ஏந்தி கடக முத்திரை காட்டி நிற்கிறார். கால பைரவரின் உருவமும் ஒரே கல்லில் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வழிபாடு**

வாகீசருக்கு தின வழிபாடு உண்டு. தினமும் ஒருகால பூசையாக காலையோ அல்லது மாலையோ நடைபெறும். இந்தநேரத்தில் மட்டும் காலையில் கோயில் திறந்திருக்கும். மாலை நேரங்களில் 4.30 மணியில் இருந்து 7 மணிவரை நடைதிறந்திருக்கும். வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் பக்தர்களின் கூட்டம் வந்தவண்ணம் இருக்கும்.

மாத வழிபாடாக பௌர்ணமி மற்றும் பிரதோஷ வழிபாடு இங்குள்ள பக்கதர்களால் சிறப்பாக நடத்தி வைக்கப்படுகிறது.

ஐப்பசி பௌர்ணமி அன்று அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. கார்த்திகைத் தீபத்திருநாளும் கொண்டாடப்படுகிறது. மார்கழித் திருவாதிரையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இங்கு திருவிழா இல்லை.

**ஐப்பசி அன்னாபிஷேகம்**

சிவனுக்கு பிரம்மஹஸ்த்தி தோஷம் நீங்க தாயார் அன்னத்தை பிச்சைப்பாத்திரமாகிய கபாலத்தில் பிச்சையிட்ட தினமாக ஐப்பசி பௌர்ணமி தினத்தில் அன்னாபிஷேகம் கொண்டாடப்படுகிறது. அதனால் இந்த அன்னா அபிஷேகத்தில் கலந்து கொண்டால் நம்மைப் பிடித்த பீடை நீங்கி வாழ்வு சிறப்புறும் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

**கார்த்திகை விழா**

பொதுவான விளக்கிடுவது என்பது தமிழர் வழிபாட்டில் மிக முக்கிய நிகழ்வாகும். விளக்கிடுவது குடும்பத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. அதுவும் மாலை நேரத்தில் விளக்கிடுவது என்பது மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது ஆகும். கோயில்களில் பண்டைய காலங்களில் மாலை நேரத்தில் விளக்கு வைப்பதனை சந்தியா தீபம் என்பவர். விளக்கு வைக்க தூண்கள் மற்றும் விளக்கு அதற்கு எண்ணெய் கொடுக்கும் பழக்கம் இருந்தனை நமக்கு மேலே உள்ள கல்வெட்டுச் செய்திகள் காட்டுகிறது. இன்று இது நந்தா விளக்கு வைத்தல் என்ற பெயரில் உள்ளது. சுபகாரியத்தடை இருப்பவர்கள் கோயிலுக்கு விளக்கு வைக்க எண்ணெய் வாங்கிக் கொடுத்தால் சரியாகும் என்ற நம்பிக்கை இன்று உள்ளது. கார்த்திகைத் தீபத்தன்று இங்கு சிறப்பு வழிபாடு செய்து தீபம் வைக்கப்படுகிறது. தீபத்திருநாள் சங்காலத்தில் இருந்து தொடர்ந்து வருவதை,

**“அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்**
**செல் சுடர் நெடுங் கொடி போல”** **(நற்றிணை202- 8-9 வாரிகள்)**

என்றும்,

**“கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த**
**அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி”** **(அகம் 24- 4-5 வரிகள்)**

என்றும்

**“கார்த்திகைச் சாற்றில் கழி விளக்கு”** **(களவழி நாற்பது 17- 3வது வரி)**

என்றும் கார்த்திகை விழா கொண்டிய செய்தியை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

திருஞான சம்பந்தர் திருமயிலை பதிகத்தில் கபாலீசுவரர் கோயிலில் கார்த்திகை விழா கொண்டாடியதை,

**“வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச்சுரத்தான் தொல்கார்த்திகை நாள்**
**தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்**

**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்**

**(தேவாரம் திருமயிலைப் பதிகம்- பாடல் 3)**

என்று கூறுகிறார்.

**திருவாதிரை**

திருவாதிரை விழாவும் கார்த்திகை விழா போன்று சங்க காலத்தில் இருந்து கொண்டபப்பட்டு வரும் ஒரு விழாவாக இருக்கிறது.

**"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்க"** **(பரி 11: 76-78 வரிகள்)**

என்று திருவாதிரை கொண்டாடப்பட்டதை கூறுகிறது.

**"ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்"**

**(தேவாரம் திருமயிலப் பதிகம்-பாடல் 4- 4வது வரி)**

என்று திருஞானசம்பந்தர் திருமயிலைக் கபாலசுவரர் கோயிலில் கொண்டாடிய திருவாதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தத் திருவாதிரை விழாவில் கலந்து கொண்டு இறைவனுக்கு நடக்கும் திருக்கல்யாணத்தைப் பார்த்து இங்கு வழங்கப்படும் மஞ்சள் கயிற்றை அணிந்து கொள்வது இல்லறவாழ்வில் மேன்மையை ஏற்படுத்தும் என்று மக்கள் நம்புகின்றனார். திருவாதிரை அன்று மக்கள் சோளம் மற்றும் பச்சரியில் இனிப்புக்களி செய்து வந்து இறைவனுக்குப் படைத்து வழிபடுகின்றனர்.

**முடிவுரை**

வாகீசர் திருக்கோயில் பட்லூரின் வரலாற்றை பறை சாற்றுவதாய் அமைந்துள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள தெய்வ உருவங்கள் கண்ணணைக்கவரும் வண்ணம் அமைந்து, சிற்பக்கலை நுணுக்கத்தை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. இங்கு கிடைக்கும் கல்வெட்டுச் செய்த அவ்வூர் மக்களின் கொடைப்பண்பை எடுத்துக்காட்டுகிறது. இங்கு செய்யும் வழிபாட்டு முறைகள் மக்களின் மரபு மற்றும் நம்பிக்கைகளை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

**துணைநூல் பட்டியல்**

1. பாலசுப்ரமணியன் .கு.வெ ( உரையாசிரியர்) -2017- நற்றிணை- நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட்லிமிடெட். 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.
2. ஜெயபால்.ரா (உரையாசிரியர்) -2017- அகநானூறு - நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட்லிமிடெட். 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.
3. கதிர் முருகு (உரையாசிரியர்)-2009, பத்துப்பட்டு, சாரதா பதிப்பகம், சென்னை - 600 014

4. நாகராஜன். வி. (உரையாசிரியர்) -2017- குறுந்தொகை- நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட்லிமிடெட். 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.
5. இராசு பவுன்துரை- மார்ச்-2005, தமிழக் கோயிற்கட்டடக்கலை மரபில் தூண்கள், மெய்யப்பன்பதிப்பகம், 53,புதுத்தெரு, சிதம்பரம் - 608001.
6. சதாசிவ செட்டியார் (பார்வையிட்டவர்)- 1927, திருஞானசம்பந்த சாமிகளின் தேவாரப்பதிகங்கள் - கயப்பாக்கம் - திருநெல்வேலி, தென்னிந்திய சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் , திருநெல்வேலி மற்றும் சென்னை.
7. சுப்பிரமணியன்.பி (உரையாசிரியர்) -2017- பரிபாடல் - நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட்லிமிடெட். 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.
8. சீதாராம் குருமூர்த்தி மற்றும் செ.ராசு (ஆசிரியர்கள்)-2007 -ஈரோடு மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1 - தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 600008
9. ஸ்ரீதர்(ஆசிரியர்) பி.கௌதமபுத்திரன்-2011-ஈரோடு மாவட்ட தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை-600008).
10. வேங்கடசாமி நாட்டார் ந.மு -2005, களவழி நற்பது, சாரதா பதிப்பகம், சென்னை - 600 014
11. மயிலை.சீனி. வேங்கடசாமி- 2005, தமிழர் வளர்ந்த அழகுக் கலைகள், நாம் தமிழ் பதிப்பகம், எண் 6, தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.


**Reference**


1. Balasubramanian .KV (commentary) -2017- Nartrinai- New Century Bookhouse Pvt. 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai-600 098.
2. Jeyabal.R (commentary) -2017- Akananuru - New Century Bookhouse Pvt. 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai-600 098.
3. Kadir Murugu-2009, Paththupattu, Sharda Publishing, Chennai - 600 014
4. Nagarajan. V. (commentary) -2017- Kurunthogai- New Century Bookhouse Pvt. 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai-600 098.
5. Rasu Poundurai-2005, Pillars in the Architectural Tradition of the Tamil Temple, Meyyappan Publishing House, 53, New Street, Chidambaram - 608001.
6. Sathasiva Chettiar (Visited)- 1927, Thevarapathikas by Thirugnanasampantha Samis - Kayapakkam - Tirunelveli, South Indian Siddhanta Nurupathippuk Kazhagam Ltd. Tirunelveli and Chennai.
7. Subramanian.P (commentary) -2017- Paripadal - New Century Bookhouse Pvt. 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai-600 098.

8. Sitaram Kurumurthy and C.Rasu (Editors)-2007 -Erode District Inscriptions Volume-1 - Department of Archeology, Government of Tamil Nadu, Chennai 600008
9. Sridhar(Editor) P. Gauthamaputhiran-2011-Erode District Archaeological Guide, Tamil Nadu Government Archaeological Department, Chennai-600008).
10. Venkatasamy Nattar N.M, -2005, Kalavazhi narpathu, Sharda Publishing, Chennai - 600 014
11. Mailai.seeni. Venkatasamy- 2005, Beauti arts developed in Tamils, Naam Tamil Publishing House, No 6, Toppu Venkatachalam Street, Tiruvallikeni, Chennai-600 005.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**வினோதினி. உ "பட்லூர் வாகீசர் திருக்கோயில் வரலாறும் கலை அழகும்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 1, சனவரி 2022, பக். 30-41

**Cite this Article in English**

**Vinodini. U" The History and art of the Badlur Wagisar Temple beauty"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 1, January 2022, pp. 30-41